5. பள்ளிக் கல்வி, நகராட்சி நிர்வாகம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். இரண்டு வார்த்தை, அவருக்குத்தான் நிறைய திட்டங்கள் கொடுத்திருக்கிறார்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தி திணிப்பை என்றைக்கும் எதிர்ப்போம் என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில், இன்றைக்கு ஆட்சி புரிந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள், தொடர்ந்து பள்ளி மாணவர்களைச் சந்திக்கும்போதெல்லாம், அவர்களுடன் உரையாடும்போதெல்லாம், அவர்களுக்கு அறிவுரை சொல்வதாக இருந்தாலும் சரி, அவர்களுக்கான வேண்டுகோளை வைப்பதாக இருந்தாலும் சரி, உரையாற்றும்போது அவர் தவறாமல் சொல்வது ஒன்றே ஒன்றுதான், 'மாநிலத்தின் முதல்வராக நான் சொல்லவில்லை, உங்களுடைய தந்தை ஸ்தானத்திலிருந்து நான் சொல்கிறேன்' என்று சொல்வார்கள். அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் கடந்த கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித் துறைக்காக ஏறத்தாழ 36,895 கோடி ரூபாய் ஒதுக்கினார். 2-வது மிகப் பெரிய துறையாக அவர் அதிகம் நிதி ஒதுக்கியது விவசாயத் துறைக்குத்தான், சுமார் 34,000 கோடி ரூபாய் ஒதுக்கினார். பள்ளி மாணவச் செல்வங்களுக்குத் தந்தையாகவும், விவசாயிகளுக்குத் தாயாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற நம்முடைய, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)* School of Excellence*-க்கு 171 கோடி ரூபாயும்,* Model School*-க்கு 130 கோடி ரூபாயும், சமூக நலத் துறையின் சார்பாக முதற்கட்டமாக, காலைச் சிற்றுண்டிக்கு 33 கோடி ரூபாயும் தொடர்ந்து நிதி வழங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து 1,300 கோடி ரூபாய் என்பது இல்லாமல், ஏறத்தாழ 1,050 கோடி ரூபாயை இன்றைக்கு நம்முடைய பள்ளி வளர்ச்சிக்காக, குறிப்பாக, இதுபோன்ற கட்டமைப்புகளுக்காக அவர் ஒதுக்கீடு செய்திருக்கிறார். ஏன் இன்றைக்குக்கூட, சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் என்னைச் சந்தித்தபோது, இந்த வகுப்பறைகளை கட்ட வேண்டும்; இந்தக் கழிவறை இடிந்திருக்கிறது,*

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 அக்டோபர் 19

கட்ட வேண்டும் என்றுதான் அதிகப்படியான கோரிக்கைகளாக வைத்தனர். இதை மனதில் வைத்து, இன்றைக்கு 1,050 கோடி ரூபாயை நம்முடைய பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்கியிருக்கின்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, புதிய சமுதாயத்தை உருவாக்கக் காத்துக்கொண்டிருக்கிற அனைத்து பள்ளி மாணவச் செல்வங்களின் சார்பாக என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகம் என்பது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது. தமிழகம் இன்றைக்கு ஏற்றப்பாதையில் இருக்கிறதென்றால், அதற்கு இது அடிப்படையான காரணமாக அமைந்ததாகும். இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்களில், ஒரு சமச்சீரான வளர்ச்சியை, கிராமங்களும் நகரங்களும் பெறுகின்ற அளவிற்குத் தமிழ்நாடு வளர்ந்ததென்றால், தலைவர் கலைஞர் அவர்கள் கிராமங்களுக்கும் அந்தப் பேருந்துகளைக் கொண்டு சென்றதுதான் காரணம். போக்குவரத்துக் கழகங்கள் கடந்த ஆட்சிக் காலங்களில் நலிந்து போயிருந்த சூழலை மாற்றி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துகின்ற அளவிற்கு மிகச் சிறப்பான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய திட்டங்களில், சிறப்பான திட்டம் எதுவென்று மக்களிடத்திலே கேட்கின்றபோது, அதில் முதல் திட்டமாக மகளிருக்கு * கட்டணமில்லா பயணம் அளிக்கின்ற திட்டம்தான் என்று மக்களே மனமுவந்து சொல்கின்ற மிகச் சிறப்பான திட்டமாக அது இருக்கிறது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இவ்வளவு சிறப்பான முறையில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. தமிழகத்தில் மட்டும்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படுகிறது. அவ்வாறு போற்றப்படுகின்ற

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

2022 அக்டோபர் 19] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

அந்தத் திட்டமும் சிறப்பான முறையில் செயல்படுவதற்கு வாய்ப்பாக மிகப் பெரிய அளவில் நிதியை வழங்கி, இந்தப் போக்குவரத்துத் துறை மீண்டும் சிறப்பான முறையில் செயல்படுவதற்கான சூழலை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 1,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கும், அடிச்சட்டம் சிறப்பான முறையில் இருக்கின்ற 1,000 பழைய பேருந்துகளில் கூடு கட்டுவதற்கும் நிதி ஒதுக்கியும், போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளை மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதேபோன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு, ஜெர்மன் நிதியுதவியுடன் 2,213 டீசல் பேருந்துகளும், 500 மின்சாரப் பேருந்துகளும் வரவிருக்கின்றன. இந்தச் சூழலில் நமது போக்குவரத்துக் கழகங்கள், தமிழக மக்களுக்கு ஒரு மிகப்பெரிய சேவையை ஆற்றும். இன்னும் பேருந்துகளையே பார்க்காத எஞ்சிய கிராமங்களுக்கும் பேருந்து வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனவும் நிச்சயம் நிறைவேறும். அதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது. ** பயணம் என்று குறிப்பிட்டதை, கட்டணமில்லா பயணம் என்று மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு நகராட்சி நிர்வாகத் துறைக்கு மிகப் பெரிய ஓர் அறிவிப்பினைத் தந்திருக்கிறார்கள். அவர், முதலில் மேயர், பிறகு உள்ளாட்சித் துறை அமைச்சர், பின்னர், துணை முதலமைச்சர், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர். உள்ளாட்சியிலே எங்களுக்கெல்லாம் தெரிவதைவிட, மற்ற மாண்புமிகு அமைச்சர்களுக்கெல்லாம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே. என். நேரு] [2022 அக்டோபர் 19

தெரிவதைக்காட்டிலும் அனைத்தையும் துல்லியமாகத் தெரிந்து வைத்திருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதனால்தான், இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்களிலேயே, தமிழ்நாட்டில் மட்டும்தான் நகர்ப்புறப் பகுதி அதிகம். 2011 மக்கள்தொகை அடிப்படையில் 45 சதவிகிதமாக இருந்தது, இன்றைய தினம் 2022 அடிப்படையிலே 58 சதவிகிதமாக வந்துவிடும் என்பது ஒரு கணக்கு. வெளியூர்களிலிருந்து வந்து செல்கின்றவர்கள் என்று கணக்கெடுத்தால், சுமார் 60, 65 சதவிகித மக்கள் தினந்தோறும் நகர்ப்புறத்திற்கு வந்து செல்கின்றனர். அதனால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கையில் அறிவிக்கின்றபோது, ரூபாய் 24,000 கோடியை இந்தத் துறைக்காக ஒதுக்கித் தந்தார்கள். கடந்த பத்தாண்டுக் காலத்தில் ஏற்கெனவே இருந்த அரசாங்கம், உள்ளாட்சியிலே எந்த அடிப்படை வசதிகளையும் செய்யாத காரணத்தால், பல இடங்களிலே ஆங்காங்கு சாலைகள் பழுதுபட்டு, அந்தச் சாலைகளைச் சரிசெய்ய முடியாமல் இருந்தது. முதலிலே சொந்த நிதியுமில்லை. தற்போது ஓரளவிற்கு நிதி வந்திருக்கிறது என்றால், அதற்கு வரி சீரமைப்பு செய்ததுதான் காரணம். சம்பளம் கொடுக்கக்கூடிய அளவிற்கு நிதி வந்திருக்கிறது. தற்போது பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கின்றபோது, எப்படி அமைக்கின்றோம் என்றால், பாதாள சாக்கடை அமைக்கும்போதே, அங்குள்ள சாலைப் பகுதிக்கும் சேர்த்து நிதி ஒதுக்கித்தான் திட்டம் வகுக்கிறோம். ஆனால் கடந்த காலங்களிலே இந்தச் சாலைகளுக்கு நிதி ஒதுக்கி, அவர்கள் பணம் தரவில்லை. அதனால் ஏற்கெனவே போடப்பட்ட சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சென்னை மாநகராட்சி, மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு என 4,600 கி.மீ. நீளமுள்ள சாலைகளைச் செப்பனிடுவதற்காக 2,200 கோடி ரூபாயை இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள்.

நண்பகல் 12—00

அவர் மேயராக இருந்தபோது சிங்காரச் சென்னை; இன்றைக்கு சிங்காரச் சென்னை 2.0. அவருடைய காலத்தில்தான் சென்னையே நல்ல சிறப்புமிகு ஒரு நகரமாக உருவாகியது. அதை மேலும் பொலிவுறச் செய்ய இன்றைக்குப் பல திட்டங்களைச்

2022 அக்டோபர் 19] [திரு. கே. என். நேரு]

செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். 1,200 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள், பாதாள சாக்கடைத் திட்டம், இருக்கிற கழிவுநீர் போவதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டு, அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிராமங்களுக்குக் குடிநீர் தருவதற்காக 8,500 கோடி ரூபாய், ஒன்றிய அரசினுடைய நிதியாக 8,000 கோடி ரூபாய் என மொத்தம் 16,500 கோடி ரூபாய், புதிய குடிநீர்த் திட்டங்களுக்காக இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். சென்னைக்கு கிட்டத்தட்ட 7,388 கோடி ரூபாய்; 16,390 கிலோ மீட்டர் நீளத்திற்கு அனைத்துச் சாலைகளையும் செப்பனிடுவதற்காக இந்த நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நீங்கள் கொடுத்த இந்த நிதியை உரிய முறையிலே பயன்படுத்தி மக்களுக்கு நல்ல முறையிலே பயன்பட துறை நிச்சயமாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்து, தங்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் துறையின் சார்பாகத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.